DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 318 / 2013 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 3 |
| Name | திருமதி. சுப்புலெட்சுமி |
| Husband Name | பாண்டி |
| Village | பெருங்குளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 52 |

**(குவிமுச பிரிவு 299 ன் படி பதிவு செய்யப்படும் வாக்குமூலம்)**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 02-04-2025.(நேரம்: 11.55 AM )

**முதல்விசாரணை**

1, நான் பெருங்குளம் உமமையம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன்.
2. நான் கூலி வேலை செய்து வருகிறேன்.
3. எனக்கு சம்பவத்தைப்பற்றி எதுவும் தெரியாது.
4.போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அ.சா 3 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 3ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 04.08.2013 ஆம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு நானும், எங்கள் ஊரை சேர்ந்த மூக்கையா தேவர் மனைவி முத்துமாலை என்பவரும் வீட்டிற்கு தேவையான ஜாமான்கள் வாங்குவதற்காக ஏரலுக்கு வந்தோம் என்றும், ஏரலில்

பலசரக்கு ஜாமன்கள் வாங்கிக்கொண்டு திரும்ப பெருங்குளம் போகும் பஸ்ஸில் நாங்கள் இருவரும் ஊருக்கு போனோம் என்றும் முத்துமாலை அருகில் பின்னர் பெயர், விலாசம் கேட்டுதெரிந்த ஈரோடு பள்ளிபாளையம் செக் போஸ்ட் ஆற்றங்கரையை சேர்ந்த பழனி மனைவி பூமா என்பவர் பேசிக்கொண்டு வந்தவர் காலை 11.00 மணியளவில் பெருங்குளம் பஸ் ஸ்டாப்பில் நிற்கும்போது முத்துமாலை வைத்திருந்த ரூபாய் 10,000 துடன் கூடிய மஞ்சள் பையை திருடியும், முத்து மாலை கழுத்தில் அணிந்திருந்த 7 பவுன் எடையுள்ள " M.K" என்று எழுதப்பட்ட இரட்டை வட முறுக்கு செயினை அறுத்துக்கொண்டு பெருங்குளம் பஸ் ஸ்டாப்பில் இறங்கி வேகமாக நடந்து சென்றார் என்றும் முத்துமாலை அலறி சத்தம்போடவும் நானும், பஸ் ஸ்டாப்பில் நின்றுக்கொண்டிருந்த எங்கள் ஊர் ராமசாமி தேவர் மகன் தங்கபாண்டி, மணிதேவர் மகன் செல்லப்பா ஆகியோர் அவரை பிடித்து விசாரித்தப்போது அந்த பெண் அவரது முகவரியை தெரிவித்தார் என்றும் அந்த பெண்ணை முத்துமாலையும் அவரது மகன் ஜகநாத பெருமாளும் ஏரல் காவல் நிலையம் அழைத்து சென்று அந்த பெண் மீது புகார் கொடுத்தார்கள் என்றும் இது தொடர்பாக ஏரல் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தப்போது உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரி பூமாவிற்கு பயந்து அவருக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் எதிரி பூமாவை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யும் வகையில் சம்பவம் அனைத்தும் தெரிந்திருந்தும் தற்போது சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.318 / 2013 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 4 |
| Name | திரு. செல்லப்பா |
| Father Name | மணிதேவர் |
| Village | பெருங்குளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 52 |

**(குவிமுச பிரிவு 299 ன் படி பதிவு செய்யப்படும் வாக்குமூலம்)**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 02-04-2025.(நேரம்: 12.06 PM )

**முதல்விசாரணை**

1, நான் பெருங்குளம் தேவர் தெற்கு தெருவில் வசித்து வருகிறேன்.
2. நான் விவசாய வேலை செய்து வருகிறேன்.
3. எனக்கு சம்பவத்தைப்பற்றி எதுவும் தெரியாது.
4.போலிசார் என்னை விசாரிக்கவில்லை.
(அ.சா 4 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 4ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

04.08.2013 ஆம் தேதி காலை 09.00 மணியளவில் எங்கள் ஊர் பஸ் ஸ்டாப்பில் வைத்து பஸ்ஸில் வந்த எங்கள் ஊர் மூக்கையா தேவர் மனைவி முத்துமாலை என்பவரின் பணத்தையும் , அவர் கழுத்தில் போட்டிருந்த தங்க செயினையும் அதே

பஸ்ஸில் வந்த ஈரோடு மாவட்டம் பள்ளிபாளையத்தை சேர்ந்த பழனி மனைவி பூமா என்பவர் திருடி சென்றவரை பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்த நானும், மற்றும் சிலரும் பிடித்து விசாரித்தோம் என்றும் அந்த பெண்ணை முத்துமாலையும் , அவர் மகன் ஜகநாத பெருமாளும் ஏரல் காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தப்போது வாக்குமூலம் அளித்து விட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும், எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.